JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 16 | Issue: 12| February 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10




கண்ணியை விதைக்கும்
சாத்தான் மீதா ?

கல்வாரியில் இரத்தம் சிந்தின
இயேசுவின் மீதா ?

# யார் மேல் பிரியம் ?

# உள்ளே...


4 என்னைத் தேடி வந்த இயேசு!!



22 ஜெபிக்கலாம் வாங்க!!



12 இழப்பிலும் பொறுமை!



26 விளக்கை தேடும் விட்டில் பூச்சிகள்!




## வாலிபர் உலகம்

## வாசகர்களின் கவனத்திற்கு...




**கீழே கொடுக்கப்பட்டுள்ள QR ஸ்கேன் பண்ணினால்...**

**ஒவ்வொரு மாதமும் பத்திரிக்கைபற்றிய கருத்துக்களை தெரியப்படுத்தலாம்.**

**நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள், உங்களுக்குப் பிடித்தமான கட்டுரைகள் அதன் மூலம் கற்றுக் கொண்டவைகளை தெரியப்படுத்தலாம்.**

**உங்கள் சந்தாவை புதுப்பிக்கலாம்.**




₹100 ஆண்டு சந்தா

₹1000 ஆயுள் சந்தா

2023ஆம் ஆண்டுக்கு முன்பு சந்தா செலுத்தி. புதுப்பிக்காத வாசகர்களுக்கு. மார்ச் மாதத்திலிருந்து பத்திரிக்கை வராது.



இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

எனக்கு அன்பான வாலிபர்களே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

இந்தப் புதிய ஆண்டிலும் பல புதிய தீர்மானங்களோடு நீங்கள் முன்னேறுவதைப் பார்த்து நான் தேவனை துதிக்கிறேன்.

இந்த வாலிப பருவத்தில் நீங்கள் யாரை பிரியப்படுத்துகிறீர்கள் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. நீங்கள் உங்களை உண்டாக்கின தேவனைப் பிரியப்படுத்துகிறீர்களா? அல்லது உங்களுடைய சொந்த ஆசைகளுக்கு இணங்கி உங்களையே பிரியப்படுத்துகிறீர்களா?



தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமானால், உங்கள் சிந்தை மறுரூபமாக்கப்பட்டிருக்க வேண்டும். சிந்தை புதிதாக மாற்றப்பட்டால் மாத்திரமே, உங்களால் தேவனைப் பிரியப்படுத்தும்படி வாழ முடியும்.

எல்லோரும் இயல்பான வாழ்க்கை வாழ்ந்து, இருதயத்தின் நினைவுகளையும் ஆசைகளையும் நித்தமும் நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது, தனித்துவமாய் மூன்று வாலிபர்கள் (சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ) துணிச்சலாய் கர்த்தருக்காகத் தனித்து நின்றது அன்று பாபிலோனை ஸ்தம்பிக்க செய்தது. அதற்குக் காரணம் மறுரூபமாக்கப்பட்ட சிந்தையும், தெளிவான தீர்மானமுமே.

இன்றைக்கு, உன் சிந்தை மறுரூபமாக்கப்பட்டால், உன் தீர்மானம் தெளிவாக இருக்கும்; நீ செல்கின்ற பாதையும் சீராக இருக்கும்.

பாவத்திற்கும் உலகத்தின் ஆசை இச்சைகளுக்கும் விரைந்து ஓடும் வாலிபர் கூட்டத்தில், தனித்து தடம் பதிக்க, தலை நிமிர்ந்து நடக்க, நீதான் தீர்மானிக்க வேண்டும்.

மீடியா மற்றும் சமூக வலைத்தளங்கள் காட்டும் மாயையில் மாட்டிக்கொள்ளாமல் இருக்க, உன் மனம் புதிதாக வேண்டும். மறுரூபமாக்கப்பட்ட சிந்தை வேண்டும். அதுவே உன் உயர்வுக்கு வழிவகுக்கும்.

**உன் திசையை நீ சரியாகத் தீர்மானித்தால், உன் எதிர்காலம் பிரகாசமாகும்.**

**தேவன் தேடும் மறுரூபமாக்கப்பட்ட வாலிபன் நீ தான் என்பதை மறந்து விடாதே!**

**அவருக்காக எழும்பிப் பிரகாசிக்கத் தவறி விடாதே!**



கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**





சாட்சி: தொகுப்பு வில்லியம்

# என்னைத் தேடி வந்த இயேசு!!





**மருத்துவப் படிப்பு படித்துக் கொண்டிருக்கும் DR. அஜினை சந்திக்க அவர் பணிபுரியும் மருத்துவமனைக்குச் சென்றோம். மிகவும் busyயாக இருந்த அவரிடம், அவரது படிப்பின் இரகசியத்தை கேட்டபோது மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. அதனை உங்களுக்காகத் தொகுத்து வழங்குகிறோம்.**

### உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?

திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் எனது சொந்த ஊர். நான் படித்தது வளர்ந்தது எல்லாமே தேனி மாவட்டம். நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். என் அப்பா 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விபத்தில் காலமானார். அம்மா கல்லூரி பேராசிரியையாக இருந்து ஓய்வு பெற்றவர். அக்கா பல் மருத்துவராக உள்ளார். நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும் பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவனாக வளர்ந்து வந்தேன். என் அப்பா குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். ஆனால் என் அம்மா மிகவும் தேவபக்தியுள்ளவர்கள். நான் சிறுவனாக இருக்கும்போது எங்கள் வீட்டில் அடிக்கடி சண்டை வருவதுண்டு. அப்படி ஒருநாள் சண்டையில் என் தந்தை எங்களை விட்டுச் சென்று விட்டார். அதற்குப் பிறகு எங்கள் தாயார் தான் தனியாக நின்று எங்களை வளர்த்தார்கள். அவர்கள் தேவனை அறிந்திருந்தபடியால், எங்களை ஜெபத்தோடும் விசுவாசத்தோடும் வளர்த்தார்கள். உறவினர்களிடமிருந்து எந்த ஆதரவோ உதவியோ இல்லாதபோதும் எங்களைப் படிக்க வைத்து ஆளாக்கினார்கள்.

### உங்களது சிறுவயது கொஞ்சம் கஷ்டமானதாகவே இருந்தது போல... சரி நீங்கள் படிப்பில் எப்படி?

நான் சுமாராகப் படிக்கும் மாணவனாகத் தான் இருந்தேன். நான் மருத்துவராக வேண்டுமென்று ஆசைப்பட்டாலும் தேவையான அளவு மதிப்பெண் பெறாததால் மருத்துவத்தை மறக்கத் தொடங்கினேன். ஆனால் வெளிநாட்டில் மருத்துவம் படிக்கும் வாய்ப்பை என் நண்பன் மூலமாகக் கர்த்தர் கொடுத்தார். அதனைப் பயன்படுத்தி

சீனா தேசம் சென்று மருத்துவம் படித்தேன். அங்குப் புதிய இடம், புதிய மொழி, புதிய மனிதர்கள் இவையெல்லாம் எனக்குத் தனிமையான உணர்வைக் கொடுத்தன. ஆனாலும் என் படிப்பைத் தொடர்ந்து படித்து முடித்தேன்.

**வேறு தேசம்... எல்லாமே உங்களுக்குப் புதியதாக இருந்தது? எப்படி உங்கள் படிப்பைத் தொடர்ந்தீர்கள்?**

கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும்போது, கணினியில் Video game விளையாட ஆரம்பித்து அதற்கு அடிமையானேன். ஆனாலும் எல்லாத் தேர்வுகளிலும் நல்ல மதிப்பெண் பெற்று வெற்றி பெறுவேன். கணினியில் விளையாடுவது நாளுக்கு நாள் அதிகரித்து என் நேரத்தை வீணடித்துக் கொண்டிருந்தன. ஒருக்கட்டத்தில் தினந்தோறும் விளையாட வேண்டும் என்ற கட்டாயத்திற்கு தள்ளப்பட்டேன். வெளிநாட்டில் பயிலும் மாணவர்கள் இந்தியாவில் அங்கீகாரம் பெற FMGE என்ற தேர்வு எழுதித் தேர்ச்சி பெற வேண்டும். நான் video game விளையாடினாலும் அந்தத் தேர்வில் முதல் முயற்சியிலேயே தேர்ச்சிப் பெற்றேன். ஒருபக்கம் படிப்பில் நல்ல ஆசீர்வாதம் இருந்தாலும், மறுபக்கம் நேரத்தைக் கணினி விளையாட்டில் செலவழித்துக் கொண்டிருந்தேன். ஆனால் படிப்பை நல்ல முறையில் படித்து முடித்தேன்.






**சரி... சீனாவில் படிப்பை முடித்தீர்கள்... இந்தியா வந்தபிறகு உங்கள் நேரத்தைக் கணினியில் தான் செலவழித்தீர்களா?**

கல்லூரிப் படிப்பை முடித்து இந்தியா திரும்பும்போது கொரோனா தொற்று பரவியது. Lock down காரணமாக வீட்டில் இருந்தநாட்களில் ஜெபிக்கலாம் வாங்க நிகழ்ச்சியில் ஜெபிப்பதைப் பார்த்து நானும் ஜெபிக்க ஆரம்பித்தேன். கர்த்தர் தீர்க்கதரிசனமாகக் கொரோனா நோயைப் பற்றி முன்னறிவித்து ஜெபிக்க வைத்தார் என்பதை கேட்டபோது ‘‘கடவுள் நம்மோடு பேசுவாரா?’’ என்ற சிந்தனை எனக்குள் எழுந்தது. உடனே அந்தக் கடவுளை இன்னும் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும் என்று இயேசுவை தேட ஆரம்பித்தேன். அப்பொழுது ஒருநாள் இரவு ஜெபத்தில் கர்த்தரின் அன்பை கண்டு நான் இரட்சிக்கப்பட்டேன். அதற்குபிறகு நான் அந்த Video Game விளையாடுவதை நிறுத்த தேவன் உதவி செய்தார்.

**சூப்பர்... இயேசுவை ஏற்றுக் கொண்டீர்கள்... அதற்குப் பிறகு உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் என்ன?**

ஜெபத்தில் நேரம் செலவழிக்க ஆரம்பித்தேன். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன். அதற்குப் பிறகு என்னுடைய ஜெப வாழ்க்கையே மாறியது. தேசத்திற்காக ஜெபிப்பது,







சுவிசேஷ கைப்பிரதிகள் கொடுப்பது, ஜெபக்கூட்டம் நடத்துவது என்று கர்த்தருக்கென்று ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். தேவன் என்னைப் பயன்படுத்த ஆரம்பித்தார். அதற்குப் பிறகு **MS General Surgery** மேற்படிப்பைப் படிக்கவும் தேவன் வாசலைத் திறந்தார். நான் இப்பொழுது ஒரு அரசு மருத்துவக் கல்லூரியில் அறுவை சிகிச்சை மாணவனாகப் படித்துக் கொண்டிருக்கிறேன். கர்த்தருடைய கிருபையால் ஏப்ரல் மாதத்தில் திருமணம் நடந்தது. மருத்துவத் துறையில் தேவனின் அன்பை வெளிப்படுத்தத் தேவன் கிருபை செய்து வருகிறார்.

### வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

உங்கள் சூழ்நிலை எதுவாக இருந்தாலும் உங்களை நேசிக்கவும் ஆதரிக்கவும் ஒரு நல்ல தெய்வம் உண்டு. அவர்தான் இயேசு. நீங்கள் எப்படிப்பட்ட பாவ அடிமைத்தனத்தில் இருந்தாலும் இயேசுவை நோக்கிக் கூப்பிடும்போது அவர் உங்களை விடுவிக்க வல்லவராக இருக்கிறார். நீங்களும் ஒப்புக் கொடுத்து ஜெபிக்கும்போது விடுதலை நிச்சயம்.



***அன்பான வாலிபர்களே, சுமாராகப் படித்துக் கொண்டிருந்த சகோதரன் அஜின் சீனாவில் போய் MBBS படித்து, இன்றைக்கு MS General Surgery படிக்கத் தேவன் ஞானத்தைக் கொடுத்துப் படிப்பில் உயர்த்த முடியுமானால், இதை வாசிக்கிற நீங்கள் கூட இப்படிப்பட்ட அடிமைத்தனத்தில் இருந்தால் இயேசுவிடம் உங்களை ஒப்புக்கொடுத்து ஜெபித்து, கர்த்தருக்காக ஊழியம் செய்யுங்கள். உங்களையும் ஆண்டவர் நிச்சயம் உயர்த்த முடியும்.***

புதிர் : பெனிட்டா

# வேதாகம புதையல் வேட்டை

கீழேக் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திலும் மறைந்திருக்கும் வேத வசனங்களைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பவும்.

















**கடந்த மாத வெற்றியாளர்**
**கிஷோர், நாகை**
அவர்களை வாழ்த்துகிறோம்.




பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **15.02.2026**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

## கடந்த மாத விடைகள்

ரூபன்,
சிமியோன்,
யூதா,
செபுலோன்,
காத்,
இசக்கார்,
தாண்,
ஆசேர்,
நப்தலி,
மனாசே,
எப்பிராயீம்,
பென்யமீன்

சரியான விடைஅனுப்பும் ஒரு நபருக்கு பரிசு உண்டு




முகப்பு செய்தி: சதீஷ்

# யார் மேல் பிரியம்?

இன்றைக்கு நாம் உலகத்தோடு ஐக்கியம் கொண்டு உலகத்தாரைப் போல வாழ்ந்து வருவதால், நாமும் உலக மக்களைப் போலத் தோல்விகளைச் சந்தித்து சோர்ந்து விடுகிறோம். அநேக சபைகள் கூட இன்று, உலகத்துக்கு ஒத்த வேஷம் தரித்து, உலகத்தோடு நெருங்கி உலகக் காரியங்களில் ஆர்வமுள்ள சபைகளாய், மாறிவிட்டன. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்ந்தார். காரணம் அவர் இந்த உலகத்தோடு ஒத்து வாழாமல், அனுதினமும் பிதா சொல்வதைக் கவனித்து அவரோடு ஐக்கியமாக இருந்தபடியால், இந்த உலகத்தில் ஜெயம் பெற்றவராய் வாழ்ந்தார். இந்த உலகத்தில் மகா மேன்மையாக எண்ணப்படுபவைகளுக்கு, தேவனுடைய பார்வையில் எந்த மதிப்பும் இல்லை, மேலும் அவைகளை அவர் அருவருக்கவும் செய்கிறார். ‘‘அவர் (இயேசு) உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று; உலகமோ அவரை அறியவில்லை **(யோவான் 1:10)** என்று சொல்லப்பட்டது போல, நீங்கள் இன்னும் இயேசுவை முழுமையாக அறியாதவர்களாகவே இருந்தால், அவரை அறிந்து கொள்ள உங்கள் மனது புதிதாக வேண்டும். அதாவது உங்களது மனம் மறுரூபமாக வேண்டும் என்று சொல்கிறேன்.

மறுரூபமாகுங்கள் என்கிற வார்த்தை ஒரு கூட்டுபுழு, பட்டாம்பூச்சியாக மாறுகின்ற அனுபவத்தைக் குறிக்கிறது. ஒரு கூட்டுப் புழுவுக்கும் பட்டாம்பூச்சிக்கும் உள்ள வித்தியாசத்தை யோசித்துப் பாருங்கள். இரண்டையும் ஒப்பிடவே முடியாது. தரையிலே ஊர்ந்து செல்லும் கூட்டுப்புழு அருவருப்பாக இருக்கிறது. ஆனால் அதே புழு பட்டாம் பூச்சியாக மாற்றமடைந்த பிறகு பார்ப்பதற்கு மிகவும் அழகாக, வானத்தில் உயரமாகப் பறந்து, அதன் வாழ்க்கைத் தரம் மாறி விடுகிறது. அதுபோல உங்களது மனம், உலகத்தையும் – உலகத்திலுள்ளவைகளையும் தேடாமல், இயேசு கிறிஸ்துவை தேடும்பொழுது உங்களது வாழ்க்கை தரம் உயரும். மனம் மறுரூபமாவது என்பது ஒரே நாளில் நடக்கிற காரியம் அல்ல. ஒவ்வொருநாளும் நீங்கள் தேவனுடைய வார்த்தையை மனதில் வைக்கும்போது மனம் மறுரூபமடையும்.



இளைய குமாரன் தன் தகப்பனிடம் தன் பாகத்தைப் பெற்றுக் கொண்டு அதைத் தவறான வழியில் செலவழித்து தன் மனம் போனபடி எல்லாம்



வாழ்ந்து பணத்தை செலவழித்து, பன்றிகளை மேய்க்கும்படி போனான். உலகத்தை நேசித்துத் தகப்பனை விட்டுப்போன அவனுக்கு மிஞ்சியது என்னவோ கவலை, ஏமாற்றம், குற்றவுணர்வு மட்டுமே. சாத்தான் இந்த உலகத்தை மிகவும் அழகாகக் காட்டுவான்; ஆனால், அதன் முடிவைக் காட்டமாட்டான். இந்த உலகமும் உலகத்தில் உள்ளவர்களும் உங்களை நேசித்து, அன்பு செலுத்தி, சந்தோஷப்படுத்தினாலும், ஒரு நாள் இந்த உலகம் உங்களைக் கைவிட்டு விடும். ஆனால் இயேசுவின் அன்பு ஒருநாளும் மாறாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். மனம்போல் வாழ்ந்த இளையகுமாரன், எல்லாவற்றையும் இழந்த பின்பு, ஒருநாள் அவனது மனம் புதிதாகி, புத்திதெளிந்து தன் தகப்பனிடம் சென்றான். தகப்பனோ, அவனை அன்போடு ஏற்றுக்கொண்டு, எல்லாவற்றையும் இழந்து வந்த அவனுக்கு, புதிய வஸ்திரத்தையும், மோதிரத்தையும், பாதரட்சைகளையும் கொடுத்து அவன் வாழ்வின் தரத்தை உயர்த்தினார். அதுபோலவே, இயேசுவும் உங்கள் வாழ்க்கையை மாற்றக் காத்துக்கொண்டிருக்கிறார்.



'பாவ சேற்றில் வாழ்ந்தது போதும், உலக சிற்றின்பங்களில் நேரத்தைச் செலவழித்தது போதும்' என்று உலகத்தை வெறுத்து, இயேசுவோடு வாழத் தீர்மானம் எடுங்கள். நீங்கள் தீர்மானம் எடுக்காதவரை ஆண்டவர் உங்களுக்கு உதவ முடியாது. இதுவரை வாழ்ந்த நிலையிலிருந்து உங்கள் வாழ்வை வேறு நல்ல திசைக்கு மாற்ற நினைக்கிறீர்களா? அப்பொழுது, ''நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் **(ரோமர் 12:2).**

நாம் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்று வேதம் நமக்குத் தெளிவாகச் சொல்கிறது. ''துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருங்கள் **(சங்கீதம் 1:1).** இயேசுவின் சீஷனான பேதுரு, இயேசுவை உயிருக்கும் மேலாக நேசிப்பதாகச் சொன்னவர், பயத்தின் காரணமாக இயேசுவை மறுதலித்து மீண்டும் மீன் பிடிக்கும் பழைய வாழ்க்கை வாழவே போய்விட்டார். அவர் வலையில் ஒரு மீன்கூட சிக்கவில்லை. இரவெல்லாம் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. பெரிய ஏமாற்றமும் வலியும் தான் அவருக்குக் கிடைத்தது. விடியற்காலையில் கரை திரும்பியபோது, கரையில் நின்ற அவர்களை நோக்கி இயேசு, ''நீங்கள் படவுக்கு வலது புறமாக வலையைப் போடுங்கள்; அப்பொழுது உங்களுக்கு அகப்படும்'' என்றார். அப்படியே அவர்கள் போட்டுத் திரளான மீன்கள் அகப்பட்டதினால் அதை இழுக்க மாட்டாதிருந்தார்கள் **(யோவான் 21:6).** தேவனோடு இருந்தவர் அவரை மறந்து, உலகத்திற்குள் போனபோது, தோல்வியைத் தான் சந்தித்தார். ஆனால் தன்னைத் தேடி வந்த இயேசுவை, அவர் மனதில் ஏற்றுக்கொண்டபோது வெற்றியுள்ள வாழ்க்கை வாழ ஆரம்பித்தார். மறுரூபமாக்கப்படாத மனது, தேவனுடைய கிரியைகளுக்குத் தடையாகவே இருக்கிறது. உங்களது மனதையும் எண்ணங்களையும் இப்பொழுதே இயேசுவுக்கு நேராகத் திருப்புங்கள்.

எனக்கன்பான வாலிபர்களே! "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்" (1 யோவான் 2:17). இந்த உலகம் அக்கினி தீக்கிரைக்கு ஒப்புக்கொடுக்கப்பட இருக்கிறது. அழிந்துப் போகிற இந்த உலகத்தை நேசிக்காமல், நித்திய வாழ்வை தருகின்ற இயேசுவை நேசிக்கவும், தேடவும் இன்றே, இப்பொழுதே தீர்மானியுங்கள். அதில் நிலைத்திருங்கள்! சிற்றின்ப மோகம் சீக்கிரம் போய்விடும் என்பதை மறந்து விடாதீர்கள்!

Heart Beat

ஆலோசனை: அவி

# நட்பு அவசியமா?



நான் வீட்டில் ஒரே பெண் பிள்ளை. எனக்கு இரண்டு Friends இருக்கிறார்கள். நான் சென்னையில் ஒரு நல்ல கம்பெனியில் நல்ல சம்பளத்துடன் வேலை பார்த்து வந்தேன். நான் வேலை செய்து பெற்றோருக்கு எந்தப் பணமும் அனுப்புவதில்லை. என்னுடைய Hostel fees, mess fees நானே payment செய்துவிட்டு Balance amount என்னுடைய personal useக்காக வைத்துக் கொள்வேன். மேலும் என்னிடமுள்ள பணத்தை என் தோழிகளின் தேவைக்காகச் செலவு செய்வேன். எப்போது Hotel மற்றும் shopping போனாலும் நான் தான் pay பண்ணுவேன். அவர்கள் கேட்கும் போதெல்லாம் Gpay பண்ணுவேன். என்னுடைய Accountல் Nill Balance வரும் வரை என்னிடம் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். நானும் சலிக்காமல் அனுப்பிக் கொண்டே இருப்பேன். ஆனால் என்னிடம் பணம் இல்லை என்று அறிந்தவுடன் என் phone call கூட Attend பண்ண மாட்டார்கள். அதுதான் வேதனையான ஒன்று. மேலும் நான் இப்படி பொறுப்பில்லாமல்ப் பணத்தை செலவு செய்ததால் என் பெற்றோர் என்னை ரொம்பவும் திட்டினார்கள். மேலும் வேலையை விட்டு நிறுத்திவிட்டு, சொந்த ஊருக்கு வந்து எங்களோடு இருந்து விடு என்று சொல்லிவிட்டார்கள். அதனால் நான் வேலையை விட்டுக் கேரளாவுக்கு வந்து விட்டேன். தற்பொழுது வேறு வேலைக்கு முயற்சித்தும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறேன். நீ எதற்கும் பிரயோஜனம் இல்லை useless உன்னால் எங்களுக்கு எப்பொழுதும் வேதனை தான் என்று பெற்றோர், ஓயாமல் திட்டிக்கொண்டே இருக்கிறார்கள். எனக்கு மிகவும் சோர்வாக இருக்கிறது. வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. என் நண்பர்களுக்குப் பண உதவி செய்தது தவறா என்று தெரியவில்லை. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் உண்மையாக அன்பு செலுத்தினேன். அதன் விளைவாக இன்று ஒன்றும் இல்லாமல் வெறுமையாக இருக்கிறேன். நான் என்ன செய்வது? என் எதிர்காலம் என்னவாகும்? என்னால் மறுபடியும் எழும்ப முடியுமா? என்னால் வாழ்க்கையில் சாதிக்க முடியுமா?

**- சோபியா கேரளா.**

அன்பு சகோதரி **Sophiya**, உங்களின் வேதனையும் சோர்வும் நன்கு புரிகிறது.

அன்பு காட்ட வேண்டிய பெற்றோர், காயப்படுத்தும்படி பேசுவதும், மேலும் எவ்வளவு நன்மை செய்தும் பெற்ற நன்மையை மறந்து **phone call** கூட எடுக்காத தோழிகள், இப்படி சுயநலமான அன்பு மத்தியில், உண்மையான அன்பும் கிடைக்காமல் நட்பும் கிடைக்காமல் தனிமையில் இருப்பது நன்கு தெரிகிறது.

**Sophia**, பிறருக்கு உதவி செய்யும் இளகிய இருதயம் உங்களுக்கு இருந்தாலும், உங்களிடம் உள்ள பணத்தை கையாளும் ஞானம் இல்லாதது, இந்தப் பிரச்சனைகளுக்குக் காரணம் என்பதை நீங்கள் உணர வேண்டும். இன்றைய சூழலில் அநேக வாலிபர்கள் சம்பாதிக்க அறிந்திருக்கிறார்கள்; ஆனால் சம்பாதித்த பணத்தை எப்படி செலவு செய்வது என்று தெரியாமல் இருப்பதே ஒரு பெரிய பிரச்சனை.

**School, College** படிக்கும் வரை பாக்கெட் மணி மட்டும் செலவுச் செய்தவர்கள், வேலைக்குச் சென்று, முதல் மாதம் சில ஆயிரங்கள் கையில் வந்தவுடன், அதை எப்படி? எதற்கு? செலவு செய்ய வேண்டும்? எவ்வளவு செலவு செய்ய வேண்டும்? என்று எல்லாம் தெரியவில்லை. ஷோபியா, உங்களின் சூழ்நிலையை பார்க்கும் போது, வேதத்தில் உள்ள ஒரு சம்பவம்தான் ஞாபகம் வருகிறது.



தன்னுடைய தகப்பனின் ஆஸ்தியை வாங்கிச் சென்ற இளைய குமாரன், அதை செலவு செய்ய தெரியாமல், தவறான வாழ்க்கை வாழ்ந்து, பின்னர் ஒன்றும் இல்லாமல் வறுமையில் மாட்டிக்கொண்டான். தனக்கு புத்தி தெளிந்த போது, என் தகப்பனிடம் செல்வேன் என்று சொல்லி எழுந்து சென்றதால், அவன் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. அவன் இழந்ததை மறுபடியும் பெற்றுக்கொண்டான். இன்றைக்கு ஷோபியா, உங்களால் மறுபடியும் எழும்ப முடியும். நிச்சயமாக உங்களுக்கு ஒரு வேலை கிடைக்கும். உங்கள் பெற்றோர் சொல்வது போல, நீங்கள் useless இல்லை. நீங்கள் மறுபடியும் சாதிக்க முடியும்.

ஆனால் உங்களுக்கு தேவை **Decission making skill. Making choice** அதாவது தெரிந்தெடுப்பதும், தீர்மானிப்பதுமே இன்றைக்கு உள்ள வாலிபர்களின் பிரச்சனை. உங்களுக்கு நல்ல வேலை, கை நிறைய



சம்பளம் ஆனால் சம்பளத்தை பெற்றோர் கேட்கவில்லை. ஆனால் எப்படி செலவு செய்தீர்கள் என்று உங்களுக்கு புரியவில்லை. **Now pocket empty.**

உங்களின் பெரிய பிரச்சனை என்னவென்றால், உங்களது தெரிந்தெடுப்பும், தெளிவான தீர்மானமும் தான். எப்படிப்பட்ட நபர்கள் உங்கள் நண்பர்களாக, தோழியாக இருக்க வேண்டும் என்று நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். மேலும் உங்களின் **Standard** என்ன? எதை நான் செய்யமாட்டேன், எதையெல்லாம் செய்வேன் என்று உறுதியான தீர்மானம் இல்லை. இப்படி ஒரு தெளிவான தீர்மானம் உங்கள் வாழ்க்கையில் இருந்தால், அநேக தவறான காரியத்திற்கு உங்கள் நண்பர்களோடு சென்றிருக்க மாட்டீர்கள். மேலும் தேவையில்லாமல் பணமும் செலவாகியிருக்காது. சொந்த ஊரை விட்டு வேறு மாநிலம் சென்றாலும், **Do's & Don't** கட்டாயம் அவசியம். உங்களை தீட்டுப்படுத்தும் காரியத்திற்கு எப்படி **No** சொல்வது என்று தீர்மானம் எடுத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் சீரான ஒழுக்கமான வாழ்க்கை வாழ முடியும். இப்படி தீர்மானம் செய்யாத பலர், தங்கள் வாழ்க்கையில் வழுக்கி விழுந்து மீண்டும் எழும்ப முடியாமல் வாழ்க்கையில் முடங்கி போகிறார்கள்.

**ஷோபியா, நீங்கள் செய்ய வேண்டிய சில காரியங்கள்:**

- உங்களால் சாதிக்க முடியும், எழும்ப முடியும் என்று மனதில் தீர்மானியுங்கள். அப்பொழுது உங்களால் எழும்ப முடியும்.
- நீங்கள் முயற்சித்தால் கேரளாவில் ஒரு நல்ல **Job**ல் **Placement** ஆக முடியும். உங்கள் முயற்சியை கைவிட வேண்டாம். மேலும் சரியான நண்பர்களை தேர்ந்தெடுப்பது நல்லது.
- எந்த காரியங்கள் என்னை தீட்டுப்படுத்துமோ அவற்றை செய்யமாட்டேன் என்று உறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும். அதற்கு விலகி இருக்க வேண்டும்.
- உங்கள் சம்பளத்தை எப்படி செலவு செய்ய வேண்டும் என்று தீர்மானியுங்கள். தவறான பாவ காரியத்திற்கும், தேவையற்ற காரியத்திற்கும் செலவு செய்ய மாட்டேன் என்று தீர்மானியுங்கள்.
- மேலும் சேமிப்பு என்ற நல்ல பழக்கத்தை பின்பற்றலாம். அது உங்கள் எதிர்காலத்திற்கும் திருமணத்திற்கும் பிரயோஜனமாய் இருக்கும்.

**இப்படி சில மாற்றங்களை நீங்கள் பின்பற்றினால், உங்கள் வாழ்க்கையில் மீண்டும் உயர்வு மலர வாய்ப்பு உண்டு. sophiya, தானியேல் என்ற ஒரு வாலிபன் தெளிவான தீர்மானம், அவனை எல்லா பிரச்சனைகளை விலக்கி தூய்மையான வாழ்க்கை வாழவும், தேவனுக்கு பிரியமாக வாழவும் உதவியது. தானியேலுக்கு உதவிய தேவன் உங்களுக்கும் உதவி செய்வார். தெளிவான தீர்மானம் மாத்திரமே சிகரத்தில் உங்களைக் கொண்டு செல்லும்.**



# இழப்பிலும் பொறுமை!



செய்தி: மோகன் சி.லாசரஸ்

**இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே [யாக்கோபு 5:11]. யோபின் பொறுமையைக் குறித்து வேதம் சாட்சி சொல்கிறது. யோபு பொறுமையாய் இருந்தபடியினால் கர்த்தர் அவரை இரண்டு மடங்கு ஆசீர்வதித்தார்.**



**"நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்"** (ரோமர் 12:12) என்று வேதம் சொல்லுகிறது. யோபு உபத்திரவத்தில் பொறுமையாய் இருந்தார். யோபுவை சுற்றி இருந்தவர்கள் நிந்தித்தார்கள், பரிகாசம் செய்தார்கள், அவருடைய பரிசுத்தத்தை கேள்விக்குறியாக்கினார்கள்; ஆனாலும் யோபு பொறுமையாய் இருந்தார்.

இயேசுவும் கூட அவரை ''பிசாசு பிடித்தவன்'' என்று சொன்னபோதும், முகத்தில் காறி துப்பின போதும், தலையில் முள்முடி வைத்தபோதும் பொறுமையாய் இருந்தார். ஆனால் நமக்கோ உபத்திரவத்தை சகிக்க மனமில்லை. சகிப்பு தன்மையும் பொறுமையும் இல்லாததினால் தான், திருமணமாகி 3 மாதத்திலேயே ''இந்த புருஷன் எனக்கு வேண்டாம், இந்த மனைவி எனக்கு வேண்டாம், நான் விவாகரத்து செய்கிறேன்'' என்று வந்து நிற்பதற்கு காரணம். உபத்திரவத்தில் பொறுமையாய் இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். குடும்பம் என்றால் உபத்திரவம், பாடு இருக்கத்தான் செய்யும். அதிலும் பொறுமையாய் இருக்க வேண்டும் என்று பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். யோபு அவருடைய மோசமான சூழ்நிலையிலும் பொறுமையாய் இருந்தார்.

யோபு **42:5,6** வசனங்களில் ''என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.





ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்'' என்று யோபு கூறுகிறார். யோபு தேவனை தரிசித்த ஒரு மனிதன். காதுகளால் தேவனைக் குறித்து கேள்விப்பட்டவர் இப்பொழுது தன்னுடைய கண்களால் தேவனை தரிசிப்பதாகக் கூறுகிறார்.

யாத்திராகமம் 33:18ஆம் வசனத்தில், ''உம்முடைய முகத்தை நான் பார்க்க வேண்டும்'' என்று மோசே தேவனிடம் சொல்கிறார். அதற்குக் கர்த்தர் ''என் முகத்தைப் பார்த்து யாரும் உயிரோடு இருக்க முடியாது. ஆனாலும், நீ தாகத்தோடு கேட்கிறதினால் நீ என்னைப் பார்க்கலாம்; இங்கு வந்து கன்மலையின் வெடிப்பில் நில், நான் கடந்து போகும்போது, என் பின்பக்கத்தை காண்பாய்'' என்று சொல்கிறார்.

பழைய ஏற்பாடு காலத்தில் காணப்படாத தேவனாக இருந்த அவரைக் காண்பிக்க தான் புதிய ஏற்பாட்டில் இயேசு உலகத்திற்கு வந்தார். அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தில், **"நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே"** என்று சவுலுக்கு தரிசனமானார். சவுல் இயேசுவை தரிசித்தார். **அப்போஸ்தலர் 22:17**ல் தேவாலயத்தில் பவுல் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, நான் இயேசுவை தரிசித்தேன் என்பதாக எழுதுகிறார். இயேசுவை தரிசிக்க முடியும். யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றி அவனுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் அவனுக்குத் தந்தருளினார் **(யோபு 42:10).** யோபு சிறையிருப்பில் இருக்கும்போதே தன் சிநேகிதர்களுக்காக ஜெபித்தார். **யோபு 42:7,8** வசனங்களில், யோபுவின் சிநேகிதர் மேல் தேவனுக்கு கோபம் வந்தது. அவர்கள் அழியாமல் இருக்க, யோபு அவர்களுக்காக வேண்டுதல் செய்தபோது, யோபின் முகத்தைப் பார்த்து அவருடைய நண்பர்களை மன்னிப்பேன் என்று ஆண்டவர் சொன்னார். ''நானே சிறையிருப்பில் இருக்கிறேன், நான் எப்படி ஜெபிக்க முடியும், முதலாவது என் சிறையிருப்பை மாற்றினால் தான் மற்றவர்களுக்காக என்னால் ஜெபிக்க முடியும்'' என்று யோபு சொல்லவில்லை. கர்த்தருடைய கோபம் தன் சிநேகிதர் மேல் வந்துவிட்டது என்பதை உணர்ந்த யோபு 'என் நண்பர்களை மன்னியும் ஆண்டவரே' என்று தன் சிநேகிதருக்காக ஜெபம் பண்ணுகிறார். கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்து, அவர் சிநேகிதர்களை மன்னித்தார். உடனே யோபின் சிறையிருப்பை கர்த்தர் மாற்றினார். நீங்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது உங்கள் முகத்தை ஆண்டவர் பார்ப்பார். உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.

**இன்றைக்கு நம் தேசத்தில் ஆண்டவரை துக்கப்படுத்துகிறவர்கள் தான் அதிகம். பாவம் செய்ததின் நிமித்தம் தெய்வ கோபம் தேசத்தின் மீது வருகிறது. நீ ஜெபித்தால் மன்னிப்பேன் என்று ஆண்டவர் சொல்கிறார். 'ஆண்டவரே என் ஜனத்தை மன்னியும், என் ஜனத்தின் அறியாமையை மன்னியும் பாவங்களை மன்னியும் நான் அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறேன்' என்று ஆண்டவரை பார்த்து ஜெபிக்கும்போது கர்த்தர் தேசத்தின் மீது வரும் கோபத்திற்கு விலக்கிக் காப்பார். யோபு தன்னுடைய வியாதியின் மத்தியில், பிரச்சனையின் மத்தியில் மற்றவர்களுக்காகப் பரிந்து பேசி ஜெபித்ததால் ஆண்டவர் யோபுவின் சிறையிருப்பை மாற்றினதுபோல, உங்கள் சிறையிருப்பையும் மாற்றி, இரண்டு மடங்கு ஆசீர்வாதங்களைத் தருவார்.!**

# Exam tips

ஒருசில மாணவ, மாணவியருக்கு தேர்வு என்றாலே பயம்.
பயத்தினால் படித்ததை எழுதாமல் குறைந்த மதிப்பெண்கள் வாங்குவார்கள்.
ஏன் தேர்வு பயம் வருகிறது? பயத்தை எப்படி சமாளிப்பது? இதைப் பற்றிய சில
Tips உங்களுக்குச் சொல்லட்டுமா...

## ✓ தேர்வு பயத்திற்கான காரணங்கள்:

- மிகக் குறைந்த மதிப்பெண் பெற்றுவிடுவோமோ என்ற பயம்.
- பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் நம்பிக்கைகளை ஏமாற்றிவிடுவோமோ என்ற பயம்.
- வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை இல்லாதது.
- கடினமாக இருக்கக்கூடிய சில பாடங்களில் அறிவு இல்லாமை.
- படிக்கும்போது கவனம் செலுத்தவோ அல்லது மனப்பாடம் செய்ய முடியாத நிலை.
- எதிர்மறையான மனநிலை.
- மற்ற மாணவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது.

## ✓ தேர்வு பயத்தை எவ்வாறு சமாளிப்பது?

- நேர அட்டவணையை உருவாக்குங்கள்
- தேர்வுக்குத் தயாராகும்போது, அதிக கவனம் செலுத்த வேண்டிய பாடங்கள் மற்றும் உங்களுக்குப் பிடித்த பாடங்கள் எனப் பிரித்துப் படியுங்கள்.
- சுருக்கமான குறிப்புகளை உருவாக்கிப் படியுங்கள்.
- ஒரு பாடத்தைப் படிக்கும்போது முக்கியமான தகவல்கள், சூத்திரங்கள், தேதிகள், நபர்கள், சம்பவங்கள் அல்லது சமன்பாடுகளைக் குறிப்பு எடுத்துப் படிக்கும்போது மனதில் பதியும். பதட்டத்தைக் குறைக்கும்.

## ✓ கவனம் செலுத்தி படிக்க வேண்டுமானால்...

***சரியான தூக்கம்.***

உடல் மற்றும் மனம் ரிலாக்ஸ் அடைய குறைந்தபட்சம் 8-9 மணிநேரம் தூங்க வேண்டும்.

***இடைவேளை எடுத்துப் படியுங்கள்.***

தொடர்ந்து மணிக்கணக்காகப் படிப்பது மனதை சோர்வடையச் செய்து உடல் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

***ஆரோக்கியமான உணவு***

முட்டை, பால், பழங்கள், பச்சை காய்கறிகள் போன்ற புரதம் மற்றும் நல்ல கார்போஹைட்ரேட்டுகள் நிறைந்த சத்தான உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

PASSED

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு"** பிலிப்பியர் 4:13

**கிறிஸ்து எனக்கு அளிக்கும் பெலத்தின் மூலமாக நான் எல்லாவற்றிலும் வெற்றி பெற முடியும் என்ற விசுவாசத்துடன் தேர்வை எதிர்கொள்ளுங்கள்! வெற்றி நிச்சயம்!!**

சாதனை சுமா கிரேஷன்




# கனவுகளால் எழுதப்பட்ட வரலாறு!!

*அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! நாம் அனைவரும் நிகழ்காலத்தில் நம்முடைய கனவுகளுக்காகவும் இலக்குகளுக்காகவும் எவ்வளவு நேரம் செலவிடுகிறோமோ, அந்த நேரம்தான் எதிர்காலத்தில் மற்றவர்கள் முன்பாக நம்மைப் பிரகாசிக்க வைக்கும். தனக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நிமிடத்தையும் தன் வெற்றிக்காகச் செலவிட்டு, இன்று உலகமே வியந்து பார்க்கும் சாதனையாளராக வலம் வருபவர் ஜெமிமா ரோட்ரிக்ஸ் (JEMIMAH RODRIGUES).*

ஜெமிமா இந்தியாவில் உள்ள மும்பையில் சாதாரண குடும்பத்தில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே கிரிக்கெட் மற்றும் ஹாக்கியில் அதிக ஆர்வம் செலுத்தி வந்தார். பள்ளிப்பருவத்தில் ஜெமிமா கிரிக்கெட்டில் அதிக கவனம் செலுத்தினார். பெரிய வசதிகளோ, சிறப்பு மைதானங்களோ இல்லாமல், குடியிருப்பு மாடியில் தந்தையுடன் கிரிக்கெட் பயிற்சி எடுக்கத் தொடங்கினார். கிரிக்கெட்டில் சாதிக்க வேண்டும் என்ற உறுதியுடன் தினமும் காலை மாலை பயிற்சி மேற்கொண்டார். விளையாட்டில் மட்டும் கவனம் இல்லாமல் படிப்பிலும் கவனம் செலுத்தினார். **அநேக கிரிக்கெட் தேர்வுகளில் ஜெமிமாவின் பெயர் இடம் பெறவில்லை. தோல்விமேல் தோல்வியைச் சந்தித்துக்கொண்டே இருந்தார்.** தோல்வி அடைந்து கொண்டே இருக்கின்றோமே என்று கவலை கொள்ளாமல், இன்னும் அதிகப்படியான பயிற்சியை மேற்கொண்டார். தன்னுடைய 17ஆவது வயதில் கிரிக்கெட்டில் இரட்டை சதம் அடித்து இந்தியா முழுவதையும் திரும்பிப் பார்க்க வைத்தார். இதுதான் ஜெமிமாவின் முதல் தொடக்கம். இதற்குப் பிறகு ஜெமிமா தல தோல்விகள் சமூக ஊடகங்களில் வரும் விமர்சனங்கள் மற்றும் 12 மாதங்களுக்கு முன் ஜெமிமாவின் தந்தை கிறிஸ்தவ மதத்தைப் பரப்புகிறார் என்ற புகாரும் இவர்மேல் வந்தது. ஆனால் ஜெமிமா எதையும் கண்டு துவண்டு போகாமல், உறுதியாக இருந்தார்.

2025ஆம் ஆண்டு ஐசிசி மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பலம் வாய்ந்த **ஆஸ்திரேலியா அணியை ஜெமிமா மேற்கொண்டு 127 ரன்கள் எடுத்துக் கடைசி வரை ஆட்டம் இழக்காமல் இந்திய அணியை வெற்றிக்கு நேராக நடத்தினார். தன்னுடைய வெற்றிக்கு முதல் காரணம் இயேசு தான் என்று நன்றி கூறி,** எந்த இடத்தில் அவமானப்படுத்தப்பட்டாரோ, அதே இடத்தில் அநேகர் கண்டு வியக்கும் வண்ணம் உயர்ந்துள்ளார். **25 வயதான ஜெமிமா இதுவரை 58 ஒருநாள் போட்டிகளில் விளையாடி, 1725 ரன்கள் எடுத்திருக்கிறார்.**

இதை வாசிக்கும் நண்பர்களே, ஜெமிமாவை பேட்டி எடுக்கும்போது அவர் கூறியது; **"என்னுடைய முழு எண்ணமும் இந்தியா ஜெயிக்க வேண்டும்"** என்று தான் இருந்தது என்று கூறி, **பைபிளில் 2 நாளாகமம் 20:17** வசனத்தையும் குறிப்பிட்டிருந்தார். **ஜெமிமா தன்னுடைய இலக்கில் முழு கவனத்தையும், தன்னை உண்டாக்கிய தேவனுக்கு முதல் இடத்தையும் கொடுத்ததால்** இன்று கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு அடையாளமாக உள்ளார். ஜெமிமா போன்று உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நிமிடத்தையும் பயன்படுத்தி எதிர்காலத்தை உங்கள் வசமாக்குங்கள்.



# பாடுகள் மத்தியில்...

தமிழ்நாட்டின் கிழக்கு தொடர்ச்சி மலையில் அமைந்திருக்கும் கொல்லிமலை, பச்சமலை, கல்வராயன் மலை, போதமலை, பைத்தூர் மலையில் ஊழியம் செய்த திரு. ஜெசிமென் பிராண்டு அவர்கள், மலைமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, தன் மனைவியோடு இணைந்து கிறிஸ்துவின் நற்செய்தியை எவ்வாறு அறிவித்தார் என்பதை இந்த மிஷனெரி வாழ்க்கை வரலாற்று பகுதியில் பார்க்கலாம்.

ஜெசிமென் 1885-ல் இங்கிலாந்தில் பிறந்தார். இவரது தகப்பனார் பிள்ளைகளின் ஆவிக்குரிய ஜீவியத்திலும், வேதத்தைப் போதிப்பதிலும் அக்கறை கொண்டவராக இருந்தார். ஜெசிமெனுக்கும் ஆண்டவருக்காகப் பணி செய்யும் வாஞ்சையிருந்தாலும், முழுமையாகத் தன்னை அர்ப்பணிக்கவில்லை. தனது 14-ம் வயதில் பிரௌன் என்ற பிரசங்கியார், ‘இயேசுவே சீக்கிரம் வாரும்’ என்று ஜெபித்துக்கொண்டிருந்ததைக் கேட்ட ஜெசிமெனுக்கு உள்ளத்தில் ஒரு நடுக்கம் வரவே, ‘‘இயேசு சீக்கிரமாக வந்துவிட்டால் நான் நரகத்திற்கு போக நேரிடுமோ’’ என்ற பயத்தில் தேவனிடம் பாவங்களை அறிக்கை செய்து, தனது 20-ம் வயதில் மிஷனெரியாகத் தன்னை அர்ப்பணித்தார்.



ஒரு வருடம் மருத்துவ கல்வி பயின்றபின், தனது 22-ம் வயதில் செல்வ செழிப்பான வாழ்கையை விட்டு, 1907-ம் ஆண்டு சென்னைக்கு வந்து,

2 வருடங்களில் தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டு, 24-ம் வயதில் சேலம் மாவட்டம் சேந்தமங்கலத்திற்கு அனுப்பப்பட்டார். அவர் எலித்தொல்லைகள் அதிகமாக உள்ள குடிசையில் வாழ்ந்து வந்தபோதும், அங்கு ஒரு சிறிய ஆஸ்பத்திரியை அமைத்து, மருத்துவ உதவிமூலம் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தினார். கொல்லிமலை ஒரு காட்டுப்பகுதி. கரடியும், செந்நாய்களும் அதிகம் இருந்தபோதிலும், பல கிலோமீட்டர்கள் நடந்து சென்று மருத்துவ உதவி செய்து இயேசுவின் அன்பைக் கூறினார். ஏறக்குறைய 200-க்கும் அதிகமான கிராமங்கள் கொல்லிமலையில் இருப்பதை அறிந்து, அங்கிருந்தே மருத்துவ உதவி செய்யத் தீர்மானித்துச் சென்றார்.

1912-ம் வருடம் (27 வயது) இங்கிலாந்திற்கு சென்று மருத்துவ பட்ட படிப்பை முடித்து விட்டு, கொல்லிமலையின் வாழவந்தி என்ற இடத்திற்கு நடந்தே

சென்று, அந்த ஊர் பூசாரி கொடுத்த சிறிய ஓலைக்குடிசையில் தங்கி, கிராமங்களுக்குச் சென்று சிகிச்சை அளித்ததோடு, இயேசுவை அறிவிக்கவும் தொடங்கினார்.




1913-ம் வருடம் சேந்தமங்கலத்தில் வைத்து ஜெசிமெனுக்கும் ஈவ்லினுக்கும் திருமணம் நடைபெற்றது. அன்று மாலையிலேயே வாழவந்தி என்ற இடத்திற்கு வந்து ஆடு மற்றும் மாட்டு கொட்டகைகளில் தங்கி மெடிக்கல் கேம்ப்கள் நடத்தி அந்தக் கிராம மக்களைச் சந்தித்தார்கள். அவர்கள் எல்லா மருத்துவ உதவிகளையும் பெற்றுக் கொண்டார்களேத் தவிர, 6 வருடங்களில் ஒருவர் கூட இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை.

10 வருடங்களுக்குப் பிறகு, இவர்கள் பிள்ளைகளான பால் பிராண்டுக்கு 9 வயதும், கோணிக்கு 6 வயதும் ஆனதால் இங்கிலாந்து பள்ளி ஒன்றின் விடுதியில் சேர்க்கப்பட்டனர். ஜெசிமென், ஈவ்லின் தம்பதியருக்கு விடுமுறை முடிந்து, பிள்ளைகளை விட்டுப் பிரிவது கடினமாகவே இருந்தது. அதுதான் பிள்ளைகளைப் பார்க்கும் கடைசி முறை என்று ஜெசிமெனுக்கு தெரியாது. கொல்லிமலை மக்களின் மீது கொண்ட ஆத்துமபாரத்தினால் ஒரே மாதத்தில் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தார்கள்.

கொல்லிமலையில் அநேக ஏழை மற்றும் அநாதை குழந்தைகளைக் குறித்த பாரம் ஜெசிமெனுக்கு இருந்ததால், இங்கிலாந்திலிருந்து பெற்ற உதவியைக்கொண்டு முதலில் பெண்களுக்கான விடுதியையும், ஆண்களுக்கான விடுதியையும் கட்டினார். ஒரு வருடத்தில் ஏறக்குறைய 25,000 பேருக்கு மருத்துவ சிகிச்சை அளித்து அவர்களுக்குக் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தினார். 600க்கும் அதிகமான அறுவை சிகிச்சைகளை அம்மக்களுக்கு செய்தார். தமது சொந்த முயற்சியால் தேவாலயம், 9 பள்ளிகள், மருத்துவமனை, அனாதைப் பெண்கள் விடுதி, ஆண்கள் விடுதி, விவசாய பண்ணை மற்றும் பட்டுப் புழு வளர்க்கும் பண்ணை போன்றவை அமைத்துக் கொல்லிமலை என்று அழைக்கப்பட்ட மரண மலையை, மக்கள் வாழும் இடமாக மாற்றிக் காட்டினார். இவை எல்லாவற்றிலும் சுவிசேஷம் சொல்ல அவர் மறந்திருக்கவில்லை. ஜெசிமென் செய்த சமுதாய சீர்திருத்த புரட்சி இன்றளவும் கொல்லிமலையில் நினைவு சின்னங்களாக நிற்கின்றது.

கொல்லிமலையில் பரவி வந்த மலேரியா காய்ச்சலும், விஷ காய்ச்சலும் ஜெசிமெனையும் விட்டுவைக்கவிலை. கறுப்பு நீர் காய்ச்சல் (Black Water Fever) என்னும் வினோத காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, 1929-ம் வருடம் ஜூன் மாதம் 15-ம் தேதி மாலை வேளையில், நல்ல போர்சேவகன் தன் ஆத்துமாவை நேசரின் கையில் ஒப்படைத்து, கிறிஸ்துவுகாய் நல்லதொரு போராட்டத்தைப் போராடி முடித்தார்.

44 வயதே ஆன திரு. ஜெசிமென் அவர்கள் தனது வாழ்நாளில் 17 வருடங்களைக் கொல்லிமலை மக்களுக்காகத் தியாகம் செய்து, மலைமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மலைமக்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றுள்ளார். நீங்கள் கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைக்க திடமனதோடு ஆயத்தமாய் இருக்கீன்றீர்களா?



சிந்திக்க : பெனிட்டா

# தேவன் மேல் பிரியமாக இருந்த தாவீது!!



தாவீது இளமையில் தேவனைத் தேடினான். தேவனுடைய வார்த்தையின் மேல் அவனுக்கு மிகுந்த வாஞ்சை இருந்ததினால் அவன் வசனத்தின்படி நடக்க விரும்பினான். தேவனுக்குப் பிரியமாய் ஆட்சி செய்தான். எனவே தேவன் தாவீதின் மேல் மிகவும் பிரியமாக இருந்தார். தாவீது நற்கிரியைகளைச் செய்தான். அவன் வாழ்க்கையின் ஆரம்பம் முதல் இறுதி வரை தேவனை முழு மனதுடன் நேசித்தான். சில நேரங்களில் சில தவறுகள் செய்தாலும், உடனடியாக மனந்திரும்பி, தேவனிடம் மன்னிப்பு கேட்டு, மீண்டும் தேவனிடத்தில் நெருங்கி வந்தான். இதனால் தேவன் தாவீதை இஸ்ரவேலின் ராஜாவாக உயர்த்தினார்.

அன்பான வாசகர்களே! தாவீதைப் போலத் தேவன் மேல் பிரியம் வைக்கும்போது, தேவன் உங்களையும் உயர்த்துவார்.

# தேவன் மேல் பிரியமாக இருந்த யோபு!!



பாடுகள், உபத்திரவம், நிந்தை, பிள்ளைகளை இழந்து, செல்வத்தை இழந்து, வியாதி – போராட்டத்தின் மத்தியிலும், யோபு தேவனை உறுதியாக நம்பினார். எல்லாப் பாடுகளையும் பொறுமையுடன் சகித்தார். துன்பங்கள் வந்தபோதும், எல்லா இழப்புகளுக்குப் பிறகும் தேவனை விட்டு விலகாமல், அவருடைய நீதியையும், அன்பையும் நம்பி விசுவாசத்துடன் இருந்த ஒரு நீதிமான் ஆவார். அவர் தேவனுக்குப் பயந்து, அவருடைய வழிகளில் நடந்தவர். இறுதியில் தேவன் அவருக்கு எல்லாவற்றையும் இரட்டிப்பாக்கி (restore) ஆசீர்வதித்தார்.

அன்பான வாசகர்களே! யோபு போல எதை இழந்தாலும் இயேசுவின் மேல் இருக்கும் பிரியத்தை மட்டும் இழந்துவிடாதீர்கள். அவருக்குப் பிரியமாக இருக்கும்போது கர்த்தர் உங்களுக்கும் இரட்டிப்பாக நன்மையைச் செய்வார்.

# தேவனுக்கு பிரியமில்லாத அம்னோன்!!



அம்னோன் தனது சகோதரியின் மேல் உள்ள இச்சையினால், மிகவும் தந்திரமாக, தன் இச்சையை நிறைவேற்றக் காரியங்களைச் செய்ய ஆரம்பித்தான். ஒன்றுமறியாத தன்னுடைய சகோதரி தாமாரை தன்னுடன் தவறாக உறவுகொள்ளும்படி கட்டாயப்படுத்தி அவளைப் பலவந்தமாய் கற்பழித்தான். அதற்குப் பிறகு அம்னோன் அவளை முன்பு விரும்பினதை விட அதிகமாக அவளை வெறுத்து, தன் காரியம் நிறைவேறியவுடன் அவளைத் துரத்திவிட்டான்.

அன்பான வாசகர்களே! அம்னோன் போல இச்சையான பாவங்களைச் செய்து தேவனுக்கு பிரியமில்லாதவர்களாக மாறிவிடாதீர்கள்.

# தேவனுக்கு பிரியமில்லாத பரிசேயன்!



பரிசேயனும் ஆயக்காரனும் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள். "தேவனே! நான் நீதியுடையவன். விபசாரக்காரன் போல் இல்லாமல் வாரத்தில் இரண்டு நாட்கள் உபவாசிக்கிறேன். என் சம்பாத்தியத்தில் தசமபாகம் செலுத்துகிறேன். ஆயக்காரனைப் போல் இல்லாமல் நான் சிறந்த பக்தி உள்ளவன். என்னை இரட்சியும்" என்று வேண்டினான். ஆயக்காரன் முழங்காலிட்டுத் தன் தலையை உயர்த்தாமல், தன் மார்பில் அடித்துக்கொண்டு, தேவனே! "பாவியாகிய என்னை இரட்சியும்" என்று தேவனிடம் ஜெபித்தான். ஆயக்காரனின் ஜெபத்தில் தேவன் பிரியப்பட்டு அவன் நீதிமானாக்கப்பட்டு திரும்பிப் போனான். சுயநீதியில் வாழ்ந்த பரிசேயன் ஜெபத்தில் தேவன் பிரியப்படாமல், அவன் ஜெபத்தைப் புறக்கணித்தார். (லூக்கா 18:10-14)

அன்பான வாசகர்களே! பரிசேயன் போலத் தாங்கள் சுயநீதியைக் குறித்து பெருமை பாராட்டினால் தேவன் உங்கள் ஜெபத்தில் பிரியப்பட மாட்டார். நீங்கள் எப்படி?

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின்

புதிய YouTube Channel

# Youth TRENDz

SPREAD THE REVIVAL FIRE

"வாலிபர் உலகம்" நிகழ்ச்சிகள் சத்தியம் TV தொலைக்காட்சி ஒளிபரப்பை நிறுத்தி, அடுத்த தலைமுறையைச் சென்றடையவும், உயிர்ப்பிக்கவும் DIGITAL PLATFORM-க்குள் நுழைய இருக்கிறோம்.

## நமது தரிசனம்:

- வாலிபர்களின் எழுப்புதல்
- உயிருள்ள சாட்சிகள்
- ஆராதனை | தேவ வார்த்தை | கலந்துரையாடல்கள் | சத்தியம்
- கிறிஸ்துவில் ஆழமாக வேரூன்றும் தலைமுறையை எழுப்புதல்



**YouTube Channel Link:**
https://www.youtube.com/@jryouthtrendz

## நீங்கள் செய்ய வேண்டியது...

SUBSCRIBE

- தயவுசெய்து SUBSCRIBE செய்யுங்கள்
- உங்கள் Youth / Church / Prayer குழுக்களில் இந்த இணைப்பைப் பகிருங்கள்
- மற்ற வாலிபர்களை subscribe செய்ய ஊக்குவியுங்கள்
- ஒரு click... ஒரு subscription...

*ஒருவருடைய வாழ்க்கை மாற்றப்படுவதற்கு நீங்கள் தேவனுடைய கருவியாக மாறலாம்!*

வேத ஆராய்ச்சி : ஜோயல்




# வேதாகம களஞ்சியம்...

ஒவ்வொரு ஆண்டின் துவக்கத்திலும் வேதாகமத்தை இந்த ஆண்டாவது ஒரு முறையாவது படித்து முடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நாம் எடுப்பது வழக்கம். ஆனால் எங்கிருந்து துவங்குவது, எப்படி படிப்பது, என்ன படிக்கிறோம் என்பதை அறியாததால் அந்தத் தீர்மானம் ஒரு சில நாட்களைக்கூட தாண்டுவதில்லை... வேதாகமத்தில் மொத்தம் 1189 அதிகாரங்கள் உள்ளன. ஒரு நாளைக்கு 4 அதிகாரம் படித்தாலே முழு வேதாகமத்தையும் ஒரு ஆண்டில் முடித்துவிடலாம். இந்த செக்மெண்டில் வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகத்தின் பின்னணியையும் சுருக்கமாகப் பார்க்கபோகிறோம்.

**ஆதியாகமம்** - உலகத்தின் தோற்றம், வீழ்ச்சி, தேவனுடைய மீட்பின் திட்டம்

பொருள்: ஆரம்பம்

**முக்கிய சம்பவங்களும், மனிதர்களும்:**

படைப்பு (ஆதியாகமம் 1-2) மனிதர்கள் கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்டுள்ளனர்- ஒவ்வொரு வாழ்க்கைக்கும் மதிப்பு மற்றும் நோக்கம் உள்ளது.

**வீழ்ச்சி** (ஆதியாகமம் 3) பாவம் உலகத்திற்குள் நுழைகிறது, உறவுகளை உடைக்கிறது.

**நோவாவும் வெள்ளமும்** (ஆதியாகமம் 6-9) தேவன் தீமையை நியாயந்தீர்க்கிறார், ஆனால் இரக்கத்தையும் நம்பிக்கையையும் காட்டுகிறார்.

**ஆபிரகாமின் அழைப்பு** (ஆதியாகமம் 12) எல்லா தேசங்களையும் ஆசீர்வதிக்கத் தேவன் ஒரு குடும்பத்தைத் தெரிந்தெடுக்கிறார்.

**குறைவுள்ள குடும்பங்கள்** (ஆதியாகமம் 25-36) ஈசாக்கு, யாக்கோபு, ஏசா ஆகியோர். தேவன், மனிதர்கள் குறைவுள்ளவர்களாய் இருந்தாலும் அவர்கள்மூலம் செயல்படுகிறார் என்பதை கற்றுக்கொடுக்கிறது - இதில் பொய், பாரபட்சம், பொறாமை ஆகியவை அடங்கும்.

யோசேப்பு (ஆதியாகமம் 37-50) தேவன் துரோகத்தையும் துன்பத்தையும் இரட்சிப்பாக மாற்றுகிறார்.

## நம் சிந்தனைக்கு:

**நாம் ஒரு நோக்கத்தோடு படைக்கப்பட்டிருக்கிறோம்.**

**நாம் தோல்வியடைந்தாலும், தவறினாலும் தேவன் நம்மில் துவங்கியதை நிறைவேற்ற உண்மையுள்ளவராக இருக்கிறார்.**

**தேவன் நம் பாடுகளையும், வேதனைகளையும் நன்மைக்காகப் பயன்படுத்தலாம். "நீங்கள் எனக்குத் தீங்கு செய்ய விரும்பினீர்கள், ஆனால் தேவன் அதை நன்மையாக முடியப்பண்ணினார்"** (ஆதியாகமம் 50:20).

**உலகம் உடைந்தாலும், தேவன் விலகிச் செல்வதில்லை - அவர் துவங்கின மீட்பின் திட்டம் வேதாகமம் முழுவதுமாகத் தொடருகிறது.**

ஜெபம் : பெனிட்டா

## ஜெபக் கையேடு - பிப்ரவரி 2026

# ஜெபிக்கலாம் வாங்க!!


போதைப் பொருட்கள், மாத்திரைகள், ஊசிகள் தடைசெய்யப்படவும், போதை பொருட்களின் தீமையைக் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவும், விஷேசமாக இந்தப் போதை பழக்கவழக்கங்களில் சிக்கி கொண்டிருக்கும் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளைத் தேவன் மீட்டெடுக்க மன்றாடி **ஜெபிப்போம்.**



கடந்த 5 (ஜூலை - நவம்பர்) மாதங்களில் மட்டும் துருக்கி, இந்தோனேசியா ஜப்பான், பிலிப்பைன்ஸ், ஆப்கானிஸ்தான் மற்றும் பசிபிக் பெருங்கடல் என 13 நாடுகளில் லேசானது முதல் மிதமானது என 1280க்கும் அதிகமான நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன என அந்தந்த நாட்டின் வானிலை ஆய்வு மையங்கள் தெரிவித்துள்ளன. நம் கண்ணெதிரே தொடர்ந்து நிறைவேறிக் கொண்டிருக்கும் கடைசிக்கால காரியங்களை அறிந்து பாரத்தோடு **ஜெபிப்போம்.**



உலக ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம் (WADA) வெளியிட்ட 2024ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், இந்தியா தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகத் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகளை பயன்படுத்திய நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. இந்த அவல நிலை மாற **ஜெபிப்போம்.**



உலகளவில் சுமார் 45 கோடி மக்கள் அதாவது உலக மக்கள் தொகையில் 7% பேர் நுரையீரல் அழற்சி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் இந்நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு, சுமார் 4 கோடிப் பேர் மரணத்தைச் சந்திக்கிறார்கள். இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் கர்த்தர் பரிபூரண சுகத்தை கட்டளையிட **ஜெபிப்போம்.**



தமிழ்நாட்டின் 15,000 குழந்தைகள் உட்பட இந்தியா முழுவதும் முதல் நிலை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள 9 லட்சம் குழந்தைகளையும் தேவன் சுகமாக்கும்படி **ஜெபிப்போம்.**





பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்கள் மத்தியில் போதை பழக்கம் அதிகரித்து வருவதால், போதையின் கோரப்பிடியில் சிக்கி தங்கள் உடல் உறுப்புகளைச் சேதப்படுத்தி, உயிர்களை மாய்த்து கொண்டிருக்கும் இளைஞர்களைக் கர்த்தர் மீட்டெடுக்க **ஜெபிப்போம்.**



குழந்தைகளைக் கடத்தி தொழில் செய்ய அனுப்பும் கும்பல் பிடிக்கப்படவும், குழந்தைகள் மீட்கப்படவும், இத்தொழிலில் ஈடுபடுபவர்கள்மீது கடுமையான சட்டங்கள் கொண்டு வரவும் **ஜெபிப்போம்.**



மகாராஷ்டிராவில் கடந்த வருடம் செப்டம்பர் – நவம்பர் மாதங்களில் மட்டும் 766 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து விவசாயிகளின் தற்கொலைகள் தடுத்து நிறுத்தப்பட **ஜெபிப்போம்.**




உலகில் 26 கோடி கிறிஸ்தவர்கள், இயேசுவைப் பின்பற்றுவதற்காக அதிக அளவு துன்புறுத்தல்களை அனுபவிக்கின்றனர். உலகளவில் 9ல் ஒரு கிறிஸ்தவர் அதிக அளவு துன்புறுத்தல்களை அனுபவிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் 11 பேர் கொல்லப்படுகின்றனர். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுவது தடுத்து நிறுத்தப்பட **ஜெபிப்போம்.**




உலகில் அதிகமான இளைஞர்களைக் கொண்ட இந்தியாவில், அவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ற அளவில் வேலை வாய்ப்புகள் இல்லை. இந்தியாவில் வேலை செய்யும் திறன் கொண்டவர்களில் 40% இளைஞர்கள் மட்டுமே வேலையில் இருக்கிறார்கள். 30%க்கும் அதிகமான இளைஞர்கள் வேலை இல்லாமல் உள்ளனர். வேலையில்லாத் திண்டாட்டம் குறிப்பாக நடுத்தர வர்க்க இளைஞர்களிடையே அதிகமாக இருப்பதாக ஒரு ஆய்வு கூறுகிறது. இந்திய பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் (CMIE) தரவுகளின்படி, நகர்ப்புற வேலையின்மை 8.4% ஆகவும், கிராமப்புறங்களில் 7.5%ஆகவும் உயர்ந்துள்ளது. இளைஞர்கள் படிப்புக்கு ஏற்ற வேலைகள் கிடைக்க **ஜெபிப்போம்.**



# இயேசுவின் அன்பின் தன்மைகள்...



**தன்னலமற்ற அன்பு:** இயேசு தனது வாழ்க்கையை மனிதகுலத்திற்காக ஒப்புக்கொடுத்தார். இது அன்பின் உச்சபட்ச வெளிப்பாடாகும் (யோவான் 13:1).



**நிபந்தனையற்ற அன்பு:** நாம் தகுதியற்றவர்களாக இருக்கும்போதும், நமக்குத் தீமை செய்பவர்கள்மீதும் அவர் அன்பு காட்டினார் (ரோமர் 5:6-8).

**தியாகம் நிறைந்த அன்பு:** தனது மகனை உலகிற்கு அனுப்பியதன் மூலமும், சிலுவையில் நமக்காக உயிரைக் கொடுத்ததன் மூலமும் இயேசு தனது அன்பை வெளிப்படுத்தினார் (யோவான் 13:1).





**மன்னிக்கிற அன்பு:** நம்முடைய பாவங்களையும், குற்றங்களையும் மன்னித்து, நம்மை அன்புடன் அரவணைக்கும் இதயம் இயேசுவின் திரு இருதயம் (யோவான் 3:16).

**செயலில் வெளிப்படும் அன்பு:** வெறும் வார்த்தைகளில் அல்லாமல், செயல்கள்மூலம் தன்னலமற்ற அன்பு (agape) இயேசுவின் வாழ்வில் வெளிப்பட்டது. நோயாளிகளை குணப்படுத்தினார், பசியுள்ளவர்களுக்கு உணவளித்தார், மக்களுக்கு ஊழியம் செய்தார் (மத்தேயு 5:43-48).



**எல்லாவற்றையும் தாங்கும் அன்பு:** இந்த அன்பு நமக்கு பலம் தருகிறது, நம்மைப் புதுப்பிக்கிறது, மேலும் மற்றவர்களிடம் அன்பாயிருக்கத் தூண்டுகிறது (1 யோவான் 4:19).



தகவல் : ஜோயல்



# SOUL DETOX

**Hello Guys!** இந்த நவீன காலத்துல நாம் பார்க்கிற, கேள்விப்படுகிற பல விஷயங்கள தெரிஞ்சோ தெரியாமலோ நம்மை **Influence** பண்ணவும், **Impact** பண்ணவும் அனுமதிக்கிறோம். அதன் விளைவு தான் பயம், மனஅழுத்தம், தாழ்வுமனப்பான்மை, அமைதியின்மை, தற்கொலை எண்ணம், இப்படி அடிக்கிக்கொண்டே போகலாம்! இது நம்ம ஆத்துமாவை கலங்கப்படுத்துவதென்பது மறுக்க முடியாத உண்மை.

எப்படி ஒரு உடல் உறுப்பு சரியா செயல்பட, அதில் உள்ள நச்சுக்களை நீக்க ஒரு **detox** தேவையோ, நித்திய நித்தியமாய் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு நிலைத்திருக்கப்போகிற நம்ம ஆத்துமாவுக்கு **Detox** அவசியமில்லையா? அத தான் இந்தப் புது **segment**-ல அலசி ஆராய போறோம். நீங்க **Ready-ah?**

இந்த மாதத்தில் ''ஆரோக்கியமற்ற நட்புகள், உறவுகள் **(Toxic Friendships and Relationships)**'' நம்மையும் நம் ஆத்துமாவையும் எவ்வாறு சேதபடுத்துகிறது என்பதை குறித்து பார்க்கலாம். பெரும்பாலும் இப்படிப்பட்ட தொடர்புகள் நம்மைக் குற்றப்படுத்துகிறதாகவும், நம்மைத் தங்கள் சுயநலத்திற்கேற்றபடி கையாளுகிறதாகவும், பொறாமை நிறைந்ததாகவும், ஒருசார்பாகவும், நெருக்கப்படுத்துகிறதாகவும் இருக்கும்.

## பாதிப்புகள்:

- ஆத்தும பெலனை உறிஞ்சி, பயம், மன அழுத்தம், சுய சந்தேகங்களை அதிகரிக்கும்.
- ஆகாத நட்புகள் நம் இருதயத்தையும், நல் ஒழுக்கங்களையும் கெடுக்கும் என்று தேவன் 1 கொரிந்தியர் 15:33-ல் நம்மை எச்சரிக்கிறார்! இப்படிப்பட்ட உறவுகளில் நீங்கள் தொடருவது தேவனுடைய சித்தமல்ல!

## இதைத் தவிர்க்கக் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள்:

- என் ஆத்தும சமாதானத்தை பாதிக்கிற உறவு எது? என் சந்தோஷத்தையும், மன அமைதியையும் இழக்க அந்த நபர் தகுதியானவரா? என்ற கேள்விகளுக்குப் பதிலைக் கண்டறியுங்கள்.
- அந்த நபரோடு உள்ள தொடர்பைக் குறைக்கவோ, துண்டிக்கவோ தீர்மானியுங்கள்.
- பயமுறுத்துதல்களுக்கு செவிகொடுக்காமல் தைரியமாக **'No'** சொல்லப் பழகுங்கள்!

இதைச் செய்வது நம் மன ஆரோக்கியத்தைக் காக்கும்.

சிறப்புக் கட்டுரை: மெலித்தா

# விளக்கை தேடும் விட்டில் பூச்சிகள்!



மழைக்காலம் முடிந்து குளிர் கலத்தின் இறுதியை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். வாய்க்கால்கள் எல்லாம் பெருகி வயல்களில் நிரம்பி பயிர் பச்சைகள் செழித்து வளரும் பருவ காலம் இது. கூடவே பூஞ்சைகளும் பூச்சிகளும் பெருகும் காலமும் கூட!

பூச்சிகள் பயிர்களை அழித்து விடும் என்பதால் அவைகளை கட்டுப்படுத்த சில நேரங்களில் விவசாயிகள் இரவு நேரங்களில் ஒரு விளக்கை வயல்களின் நடுவில் தொங்க விடுவார்கள். விளக்கின் வெளிச்சத்தில் ஈர்க்கப்படும் பூச்சிகள் அவ்விளக்கில் மோதி விளக்கின் வெப்பத்தில் இறந்துவிடும். காலையில் வந்து பார்த்தால் ஆயிரக்கணக்கான பூச்சிகளின் இறந்த உடல்களை நாம் பார்க்க முடியும். ஏன் இந்த பூச்சிகள் எல்லாம் கூட்டமாக இப்படி தற்கொலை செய்து கொண்டன என்று யோசித்துப் பார்த்தால் விளக்கின் ஒளி அவைகளை ஈர்த்திருக்கிறது என்பதை கண்டுபிடிக்க முடியும். அறிவியல் பூர்வமாக அநேக தியரிகளை இதற்கு சொன்னாலும் கொஞ்சம் எச்சரிப்புடன் அவை இருந்திருந்தால் இந்த அகால மரணங்களில் இருந்து அழகாக தப்பித்திருக்கலாம். தங்கள் கண் முன்னே மற்ற பூச்சிகள் விழுந்து மடிவதை பார்த்ததும் எச்சரிப்படைந்து தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளாத பூச்சிகள் தாங்களும் அதே விளக்கில் விழுந்து மடிந்து விடுகின்றன.

***வாழ்க்கையும் அப்படித்தான், சில நேரங்களில் உலகம் என்னும் ஒளி நம்மை ஈர்த்துவிடுகிறது. அந்த வெளிச்சம் காட்டும் திசை நோக்கிப் போனவர்களின் முடிவு பாதாளம் என்னும் படுகுழியாகவே அமைந்திருக்கின்றது.***

மனிதர்களுக்கு எப்போதும் ஏதாவது ஒரு ஈர்ப்பு அவசியப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அதுவும் வாலிபப் பருவம் என்றால் எதிர்பாலரின் ஈர்ப்பு அல்வா சாப்பிடுவது போல் அமைந்து விடுகிறது. 50 கிராமுக்கு மேல் அல்வா சாப்பிட சாப்பிட அது திகட்டதுவங்கிவிடும்,ஒருவேளை ஒருசிலர் விதிவிலக்காக இருக்கலாம். ஆனால் எதிர்பாலரோடு ஏற்படும் பழக்கம் எவ்வளவு நீளமாக சென்றாலும் திகட்டாத தித்திப்பாக இருக்கிறது. இங்கேதான் வயக்காட்டு விளக்கொளியாக விட்டில் பூச்சிகள் விழுந்து மடியும் படுகுழியாக சாத்தான் நமக்கான தூண்டில் புழுவை போட்டு விடுகிறான். இறுதியில் தூண்டில் புழுக்களுக்கு ஆசைப்பட்ட பெருமீன்கள் தூக்கில் தொங்கிய கைதிகளாக துடிதுடித்து சாகின்றன.

உலகம் காட்டும் மாய ஒளியில் இச்சை என்னும் ஈர்ப்பு இருக்கிறதே ஒழிய, அன்பு என்னும் ஆழம் இருப்பதில்லை! ஒருவேளை இப்படி கற்பனை செய்து பாருங்கள், ஒரு மாபெரும் சந்தையில் அன்பின் பல வடிவங்கள் விலைக்கு விற்கப்படுகின்றன. நாம் அதற்குள் நுழைகிறோம். உண்மையான அன்பை கண்டுபிடித்து சரியான விலை கொடுத்து நாம் வாங்க வேண்டும்.





முதல் கடையில் ஒரு அன்பு விற்கப்படுகிறது அது ஆண் பெண் இருபாலருக்கும் இடையேயான அன்பு. அது சுத்தமானதாக இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்து பார்த்தால் அதில் பல கலப்படங்கள் இருக்கிறது. சில பல கண்டிஷன்களோடு அந்த அன்பு விற்கப்படுகிறது. பல நேரங்களில் அந்த அன்பு முறியும் தன்மையோடு இருக்கிறது. சந்தையின் எல்லா அன்பையும் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு அதில் சிறந்த கலப்படமில்லாத அன்பு எது என்பதை வாங்கலாம் என்று முடிவோடு அடுத்த கடைக்கு நகர்கிறோம். அடுத்த கடையில் சகோதர பாசம் என்ற அன்பு விற்கப்படுகிறது. அதில் கலப்படம் இருக்கிறதா என்று பார்த்தால் ஆரம்பத்தில் சிறப்பாகவும் இறுதியில் கலப்படமாகவும் இருக்கிறது.

இன்னும் அடுத்த கடைக்கு சென்று பார்த்தால் நண்பர்களுக்கு இடையேயான நட்பு விற்கப்படுகிறது. ஓ, இது நன்றாக இருக்க வாய்ப்பு இருக்கிறது இதை வாங்கி விடலாம் என்ற எண்ணத்தோடு அதை ஆராய்ச்சி செய்து பார்த்தால் அதுவும் ஒரு கட்டத்தில் கடும் கலப்படமாகவே இருக்கிறது. இப்படி ஏழு கடைகளைத் தாண்டி எட்டாவது கடைக்குள் நுழையும் போது அங்கே ஓர் அன்பு இருக்கிறது. பார்த்தாலே பரிசுத்தமாக அழகாக ஆழமானதாக இருக்கின்றது.

ஆனால் இது விற்பனைக்கு அல்ல என்ற பலகை மாட்டப்பட்டு இருக்கிறது. அட இந்த அன்பை வாங்கலாம் என்று நினைக்கும் போது விற்பனைக்கு அல்ல என்று எழுதி வைத்திருக்கிறார்களே என்ற மனச்சங்கடத்தில் நாம் சோர்வடையும்போது அந்த அன்புக்கு சொந்தக்காரர் இலவசமாகவே எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறார். யார் அவர் என்ற அதிர்ச்சியில் அவர் முகம் நோக்கினால் சிலுவை நாதரின் சிவந்த முகம் சிந்தனைகளால் கெட்டுக் கிடக்கும் நம் இருதயத்தை ஊடுருவிப் பார்க்கிறது. அவ்வேளையே முழங்கால் படியிட்டு பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என் பாவங்களை மன்னியும் என்று சரணாகதி அடைந்து விட்டால் பாதை காட்டும் மா வெளிச்சமாக அவர் நமக்குள் வந்து விடுகிறார். வாங்க முடியாத, விலை மதிக்க முடியாத அவரின் அன்பின் வெள்ளம் நம் சிறிய மனதிலிருந்து உடைந்த அணைக்கட்டாய் பெருக்கெடுக்கிறது. அவர் முக பிரகாசம் பாதை காட்டும் பரம வெளிச்சமாய் நம் கால்களுக்கு தீபமாகிறது. இது விட்டில் பூச்சிகளை கொல்லும் விபரீத விளக்கு அல்ல; வாழ்வின் பாதையை வெளிச்சமாக்கும் உன்னத அன்பின் ஒளி.



**அன்பிற்குரிய நண்பர்களே, பாதாளத்திற்குள் நம்மை இழுத்துக் கொள்வதற்கு இந்த உலகம் அற்பமான இச்சைகளையும் ஆசைகளையும் ஒவ்வொரு நாளும் ஊடகங்கள் வழியாக அனுப்பிக் கொண்டே இருக்கிறது. அவைகள் எல்லாவற்றிலும் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. அது நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்றவரின் குரலுக்கு அடிபணிவதிலிருந்து துளிர்கின்றது. அந்தத் துளிர் செடியாகி மரமாகி விருட்சமாகி கனியாகி உங்கள் வாழ்வை எல்லாம் வளமாக்கட்டும்! தேவாதி தேவன் உங்கள் துணையாக இருக்கட்டும்! மாரநாதா!**




வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து
பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன்
அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு பிறரையும் பெலப்படுத்த
இயக்கப்படு! இயக்கப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (1ST FEB)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor,
Tiruchendur Road,
Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2ND SUNDAY (8TH FEB)

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre,
57/2 Thomasappa layout (Opp)
Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MULUND (5PM - 7:30PM)**
Shekinah NLA Church,
Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar,
1st street, Salem Road,
Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto,
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service,
Gandhiji Road
9750722000

## EVERY 3RD SATURDAY (21ST FEB)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross,
St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3RD SUNDAY (15TH FEB)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex,
#43/R4, Rajendra Nagar,
Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor,
Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9750955548

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
IS.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 4TH SUNDAY (22ND FEB)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**



# கர்த்தர் எவைகளில் பிரியப்படுகிறார்...

**துதியில்:**
"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்" (ஏசா. 43:21). நம்முடைய துதி தேவனை மகிமைப்படுத்துகிறது. விசுவாசத்திலும், உத்தம குணத்திலும் பிரியப்படுவது போல, துதிப்பதிலும் கர்த்தர் பிரியப்படுகிறார் (சங். 69:30,31).





**ஜெபத்தில்:**
எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுத்தல் வேண்டுமென்று புத்திசொல்லுகிறேன். அதிகாரத்தில் உள்ளவர்களுக்காக ஜெபிக்கும்போது தேவன் பிரியப்படுகிறார் (1 தீமோ. 2:1-3).

**விசுவாசத்தில்:**
விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். கர்த்தர் விசுவாசத்தில் பிரியப்படுகிறார் என்றால், நாம் அவரை நம்பி, அவரைத் தேடி, அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு வாழும்போது அவர் பிரியப்படுகிறார் (எபி. 11:6).





**உற்சாகமாய் கொடுக்கிறவன்மேல்:**
கர்த்தருக்கு நாம் எதைக் கொடுத்தாலும் துக்கத்தோடு அல்லது நிர்ப்பந்தமாகவோ இல்லாமல், சந்தோஷமாகக் கொடுக்க வேண்டும். உற்சாகமாகக் கொடுக்கும்போது தேவன் பிரியப்படுகிறார் (2 கொரி. 9:7).

**கர்த்தருக்கு பயப்படுகிறவன்மேல்:**
தேவனை உண்மையாக நேசித்து, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்கள்மேல் தேவன் பிரியமாக இருக்கிறார். தேவனுக்குப் பயந்து, அவருடைய அன்பையும், இரக்கத்தையும் நம்பி வாழும் மக்களைத் தேவன் மிகவும் நேசிக்கிறார் (சங். 147:1).



Teen Zone

# கண்டுபிடி!!

இளம் வாலிபர்களை உற்சாகப்படுத்த இந்தப் பகுதியைத் தயாரித்து வழங்குகிறோம். இதில் கேட்கப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்விக்கான விடையும் இந்த மாத வாலிபர் உலகம் பத்திரிக்கையில் உள்ளது. நீங்கள் எந்தப் பகுதியையும் விடாமல் படித்தால் அதற்கான விடைகள் கிடைக்கும். விடைகளைக் கண்டுபிடித்து, எந்தப் பக்கத்தில், எங்கு இருக்கிறது என்பதை தெளிவாக எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். சரியான பதிலை எழுதி உங்கள் பெயர், ஊர், வயதுடன் முதலில் அனுப்பும் 3 இளம் வாலிபர்களுக்குப் பரிசு வழங்கப்படும்.

1. FMGE என்ற வார்த்தை எந்த இடத்தில் இருக்கிறது?
2. பேதுருவைப் பற்றிச் சொன்ன வாசகம் எந்தப் பக்கத்தில் உள்ளது?
3. Passed என்ற வார்த்தை எத்தனை இடத்தில் உள்ளது?
4. 25 வயது என்ற வார்த்தை எங்கு இருக்கிறது?
5. வாழவந்தி என்ற சொல் எந்தப் பகுதியில் இருக்கிறது?
6. St. Mary's Road என்ற வார்த்தை எங்கு இருக்கிறது?
7. 2 கொரி.9:7 வசனம் எந்தப் பக்கத்தில் இருக்கிறது?
8. தினத்தந்தி அலுவலகம் அருகில் எந்தப் பக்கத்தில் இருக்கிறது?
9.  இந்தப் படம் எங்கிருக்கிறது?
10. 

இந்தப் படம் எங்கிருக்கிறது?

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

Teen Zone

சிறுகதை : காலேப்

# Notification




அருண் படிக்க table la bookஅ open பண்ணி பாத்துகிட்டே இருந்தான்... ஆனா mind ellam phone மேல... whatsApp ping... Instragram notification... “Someone liked your post”... “New reel for you...” ஒவ்வொரு notificationம் அவனை study tableல இருந்து slowஆ வெளியே இழுத்துகிட்டு போச்சு.





3 minutes scroll பண்ணிக்கிட்டு திரும்பப் படிக்கலாம்னு நெனச்சான். ஆனா அந்த 3 minutes... 3 hours ஆனது... 3 hours... முழு படிப்பு நேரமும் waste ஆனது. இப்படியே பல நாட்கள் சென்றது... rankம், markம் கொறஞ்சிக்கிட்டே இருந்திச்சு... இதனால ஒரு பக்கம் guilt, மறுபக்கம் phone scroll பண்றத விடவும் முடியல... நான் ஏன் இப்படி இருக்கேன்னு பெரிய question... அவன் மனசு சுமையா இருந்திச்சு.

ஒருநாள் அருண், phoneஅ chargerல போட மறந்துட்டான்... battery 1% தான் இருக்கு. அந்த நேரத்துல power cut ஆச்சி... ‘‘டேய் அருண் இன்னைக்கு shut down... Evening 6 மணிவரை current வராதுன்னு அம்மா சொன்னதும் இன்னும் irritate ஆனான். கொஞ்ச நேரம்கூட phone இல்லாம இருக்கவே முடியல...



ஆனா battery drain ஆகி phone off ஆன அந்த silenceல தான் ஒரு truth அவனை அடிச்சிச்சு. சில நாட்களா பேசாம mute-ல இருந்த heart பேசத் தொடங்கிச்சு.

Paddikka bayam... Parents pressure... Friends oda comparison... இதெல்லாம் மறந்து escape ஆகத் தான் நான் social




**mediaவ scroll** பண்ணிக்கிட்டிருக்கேன்... **Real world ah face** பண்ண முடியாம தான் **social media world**குள்ள முழுகியிருக்கிறேன்னு உணர்ந்தான்.

அந்த **realization** அவனுக்கு **turning point**ஆ மாறிடுச்சு. அந்த நாள் முதல் ஒரு சின்ன **decision : “Notification off. study on.”**

அன்று முதல் **10 mins** படிப்பு **30 mins** ஆ அதிகமாச்சு... அப்படியே **1 hour** ஆச்சு. **Mind calm** ஆக... **Focus-um strong** ஆச்சு.

நாளுக்கு நாள் அவன் **subject**ஐ **enjoy** பண்ண ஆரம்பிச்சான். **Results** வந்தப்போ, அவன் **pass** மட்டும் ஆகல... **school** லேயே **topper list**ல் இருந்தான்.




அருணுக்கு **finally** புரிஞ்சது **problem phone notifications** இல்ல... அவனுக்குள்ள **notification mute** ஆயிருப்பதுதான்.

**God’s voice, God’s reminders, God’s gentle whispers-** அவன் **mind full noise** காரணமா கேக்காம போயிருந்திச்சு.

அவன் முடிவு எடுத்தான்: **“First notification belongs to God”. Phone open** பண்றதுக்கு முன்னாடி, **Bible verse open** பண்ண ஆரம்பிச்சான். **Scrolling-ku** முன்னாடி, ஒரு சின்ன **prayer** பண்ண ஆரம்பிச்சான்.

**அதான் அவனுக்கு strength, clarity, focus, everything else will fall into place.**

**அவனுடைய marks, discipline, confidence - அவனுடைய spiritual focus stable ஆனதும், மற்றதெல்லாம் இயல்பா உயர ஆரம்பிச்சது.**

**நம் இருதயத்தில் பல்வேறு சத்தங்கள் ஒலித்துக் கொண்டிருக்கும்போது, நம்மிடத்தில் தேவனால் பேச முடியாது... அவர் நம்மிடம் பேசத் தனிமையான நேரத்தை எதிர்பார்க்கிறார்... நீங்கள் அதைக் கொடுக்கும்போது, அவர் உங்கள் படிப்பையும், எதிர்காலத்தையும், வாழ்க்கையையும் சரியான பாதையில் நடத்துவார்.**



# செய்திகள்!

## கடந்த ஆண்டில் டெல்லியில் ரூ.1,250 கோடி சைபர் மோசடி!




டெல்லி பிராந்தியத்தில் கடந்த ஓராண்டில் மட்டும் அப்பாவி மக்களிடம் இருந்து ரூ.1,250 கோடியை சைபர் மோசடி கும்பல் கொள்ளையடித்துள்ளது. சமீப காலமாக ஆன்லைன் மோசடி அதிகரித்து வருகிறது. டெல்லி காவல்துறை மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது: "கடந்த 2024-ம் ஆண்டில் டெல்லி பிராந்தியத்தில் சைபர் மோசடி கும்பல் ரூ.1,100 கோடி மோசடி செய்தது. இந்த கும்பலில் பெரும்பாலானோர் கம்போடியா, வியட்நாம், லாவோஸ் ஆகிய நாடுகளில் தங்கியிருந்து, சீனக் கூட்டாளிகளின் கட்டளைப்படி செயல்படுவோர் ஆவர்.

2025-ம் ஆண்டில் டெல்லி பிராந்தியத்தில் இந்த கும்பலால் மோசடி செய்யப்பட்ட தொகை ரூ.1,250 கோடியாக அதிகரித்துள்ளது. இதில் ஆறுதல் அளிக்கும் விஷயமாக மீட்கப்பட்ட பணமும் உயர்ந்துள்ளது. 2024-ல் மோசடி செய்யப்பட்ட தொகையில் 10 சதவீதம் மீட்கப்பட்டது. 2025-ல் இது 24 சதவீதமாக உயர்ந்துள்ளது.

2025-ல் நாடு முழுவதும் சைபர் மோசடி கும்பலால் மோசடி செய்யப்பட்ட தொகை சுமார் ரூ.20,000 கோடியாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இது ஒரு மாநிலத்தின் வரவு செலவு திட்டத்திற்கு இணையான தொகையாகும். இவ்வாறு அவர் கூறினார்.

- ஜனவரி 13, 2026 இந்து தமிழ் திசை.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

# Achievers

தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை

**திருச்சியில்...**
**பிப்ரவரி 7** சனிக்கிழமை
மதியம்: 3:00 - மாலை: 6:00
இடம்: YMCA ஹால், GH எதிரில், புத்தூர், திருச்சி -17
தொடர்புக்கு: 94897 75075

**கிணத்துக்கடவில்...**
**பிப்ரவரி 8** ஞாயிறு
மதியம்: 3:00 - மாலை: 6:00
இடம்: IPA சபை, ASN சில்க்ஸ் பின்புறம், காந்தி நகர், கிணத்துக்கடவு
தொடர்புக்கு: 94884 75315

**ஜெபமலையில்...**
**பிப்ரவரி 15** ஞாயிறு
மதியம்: 2:00 - மாலை: 5:00
இடம்: கீழ மாதாபுரம், ஜெபமலை
94860 37586 | 95008 15838

**பேர்ணாம்பட்டில்...**
**பிப்ரவரி 8** ஞாயிறு
மதியம்: 3:00 - மாலை: 6:00
இடம்: எழுப்புதல் ஜெப கூடாரம், இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு வி. கோட்டா ரோடு
தொடர்புக்கு: 99408 54125



செய்தியும், ஜெபமும்:
**சகோ. சாம் ஜெபராஜ்**

**நாமக்கல்லில்...**
**பிப்ரவரி 21** சனிக்கிழமை
மாலை: 4:00 - இரவு: 7:00
இடம்:
கவின் கிஷோர் திருமண மண்டபம்
உழவர் சந்தை அருகில்
நாமக்கல் டவுன்
94893 01237 | 94886 18305



செய்தியும், ஜெபமும்: **சகோ.ஜெபஸ்டின் சாமுவேல்**

**சேலத்தில்...**
**பிப்ரவரி 22** ஞாயிறு
மாலை: 4:00 - இரவு: 7:00
இடம்: காருண்யா ஏசி ஹால்
அண்ணா பூங்கா பேருந்து நிறுத்தம், தினத்தந்தி அலுவலகம் அருகில், காந்தி மைதானம் எதிரில், அரிசி பாளையம்
99620 85523 | 95977 54872



செய்தியும், ஜெபமும்:
**சகோ. காலேப்**



செய்தியும், ஜெபமும்:
**சகோ. அவினாஷ்**

**தோல்வி பயமா! கலக்கமா! படித்தது மறந்து போகிறதா?**
**உங்களுக்காகவே இந்தக் கூடுகை!**

பெற்றோர் உங்கள் பிள்ளைகளை அழைத்து வாருங்கள்!



அன்புடன் அழைக்கும்:
**சகோ. மோகன் சி. லாசரஸ்**

Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847

